## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 28–ம் நாள் திங்கட்கிழமை எதிர்மனுதாரர் தரப்பு 4–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி பென்ஞ் கிளார்க் திருமதி. நாகம்மாள் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **மாயழகு** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**28.07.2025** **DVC.No.1/2023** **எ.ம.சா. 4 ஆஜர்**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன் . மனுதாரர் என்ன பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மகனுடன் சுந்தர்ராஜன்பட்டிக்கு சேர்ந்து வாழ வர வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவிற்கு தான் நான் தற்போது மறுப்புரை செய்துள்ளேன் என்றால் மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து வாழ வந்தால் அதற்கு ஆதரவு தெரிவிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் 3 வது பாராவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு எந்தெந்த தேதியில் பாசத்தோடு நடத்தி வந்தோம் என்றும் 1 ம் எதிர்மனுதார் 1 ம் மனுதாரரை எந்தெந்த தேதிகளில் எந்த காலகட்டத்தில் அன்போடு நடத்தி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நெடுஞ்சாலை துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன் . நான் 1998 ல் மேற்படி பணிக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான் . நான் போலி கல்விச் சான்றிதழ் கொடுத்து வேலைக்கு சேர்ந்து அதன் உண்மை தன்மை அரியவந்து 31.05.1999 ம் வருடம் நான் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்றால் பணி நீக்கம் செய்யப்பட்டது சரி. ஆனால் அது பங்காளிகளுக்குள் நடைபெற்ற சண்டையின் காரணமாக நடந்ததாகும். பங்காளி சண்டையால் நான் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்று சொல்வது தவறு . நான் போலி கல்விச் சான்றிதழ் கொடுத்து வேலைக்கு சேர்ந்ததால் தான் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல. தீர்த்தாம் பேட்டை குரூப்பில் பட்டா எண் .200 ல் உள்ள வீடு எனக்கு பூர்விக பாத்தியமான வீடு என்று சொன்னால் சரிதான். அதனை என் தகப்பனார் ஒத்தி வைத்திருந்தார். அதனை நானும் எனது மனைவியும் மீட்டோம் . மேற்படி வீட்டில் எனது தம்பி முத்தழகு , தங்கராஜ் ஆகியோருக்கு பாத்தியம் உள்ளதா என்றால் பாத்தியம் இல்லை. பூர்விக சொத்தில் எனது உடன்பிறந்தவர்களுக்கும் பாத்தியமுள்ளது என்றாலும் அவர்களுக்கு பங்கு கொடுக்க கூடாது என்பதற்காக நான் கையகப்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல . தீர்த்தாம் பேட்டை குரூப்

கொம்புகாரனேந்தல் கிராமத்தில் பழைய சர்வே எண் .12/2 புதிய நத்தம் சர்வே எண்.215/16 யாருக்கு பாத்தியமான சொத்து என்றால் பூர்விக பாத்திய சொத்து ஆகும். அதனை எனது தகப்பனார் கிரையம் கொடுத்து விட்டார் . அதனை நாங்கள் வாங்கியுள்ளோம். மேற்படி சொத்து சம்பந்தமாக மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்து பூர்விக சொத்தாக இருக்கும் பட்சத்தில் இந்த நம்பர் 2ம் மனுதாரர் எனது பேத்தி என்ற முறையில் அவருக்கு பாத்திய உரிமை உள்ளது என்றால் மனுதாரர்கள் எனது மகனுடன் சேர்ந்து வாழ்ந்தால் துரைமுருகன் சம்பாதித்தது போக மற்ற அனைத்து சொத்துக்களிலும் பாத்தியம் உள்ளது. மதுரை மாவட்டம் சுந்தர்ராஜன்பட்டி கிராமத்தில் ரீ சர்வே நம்பர் 16/5ல் கட்டுப்பட்ட 1,1A என மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட 2 பிளாட்டுகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் , 1 மற்றும் 4ம் எதிர் மனுதாரர்கள் பெயரிலும் கூட்டாக உள்ளது . அந்த சொத்துக்களிலும் மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றால் மனுதாரர்கள் எனது மகனுடன் சேர்ந்து வாழ்ந்தால் பாத்தியமுள்ளது. 1ம் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தின் போது 1ம் மனுதாரருக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது குடும்பத்தினரின் வற்புறுத்தலின் பேரில் 1ம் மனுதாரருக்கு 16 1/2 பவுன் தங்க நகைகளும் 1ம் எதிர் மனுதாரருக்கு 5 1/2 பவுன் தங்க நகைகளும் ஆக மொத்தம் 22 பவுன் தங்க நகைகள் போடப்பட்டது என்றாலும், அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதனை மறைத்து மனு தோதிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . என்னுடைய சொந்த வீடுகள், நிலங்கள் மற்றும் 1ம் எதிர் மனுதாரர் பர்னிச்சர் கடை வைத்து அதிகமான சம்பாத்தியம் உள்ள நபர் என்று கூறி வற்புறுத்தி 1ம் மனுதாரர் வீட்டாரிடம் இருந்து ரூ .5 இலட்சம் மதிப்புள்ள சீர் சாமான்களும் , Passion Pro இரு சக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ.75,.000/–மும் LED Colour TV, Fridge, Washing Machine போன்ற பொருட்கள் எல்லாம் 1ம் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டு அது தற்போது எங்கள் வீட்டில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் கொண்டு வந்த சீர்வரிசை பொருட்கள் எல்லாம் எங்கே உள்ளது என்றால் சுந்தராஜன்பட்டியில் சின்ன சின்ன சாமான்கள் எல்லாம் 2 சாக்குகளில் கட்டப்பட்டுள்ளது . திருமணம் முடிந்தவுடன் 1ம் மனுதாரரை குடும்பம் நடத்த வேண்டி சுந்தராஜன்பட்டிக்கு தான் அழைத்து சென்றோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து சென்ற நாளில் இருந்து நானும் எனது மனைவியும் 1ம் எதிர்மனுதாரருக்கு வேறு இடத்தில திருமணம் செய்திருந்தால் 50 பவுன் நகையும் கூடுதலான வரதட்சணை பணமும் வாங்கி கொடுத்திருப்பார்கள். உன்னை திருமணம் செய்து ஒரு பிரயோஜனமும் இல்லை என்று சொல்லி அடிக்கடி 1ம் மனுதாரருடன் தகராறு செய்து கூடுதல் வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்தோம் என்றால் சரியல்ல . அதே போல் எனது மகனான 1ம் எதிர் மனுதாரரிடம் நானும் எனது மனைவியும் துர்போதனை செய்து 1ம் மனுதாரரை எனது மகன் அடித்து துனபுறுத்தி கொடுமை செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் காரணமாக நாங்களாக தான் 1ம் மனுதாரரை

வீட்டிலிருந்து வெளியேற்றினோம் என்றால் சரியல்ல. அவ்வாறு வெளியேற்றும் போது சீர் வரிசைப் பொருட்கள் , அனைத்து நகைகள் அனைத்து கல்விச் சான்றிதழ்களையும் எங்கள் வீட்டிலேயே 1ம் மனுதாரர் வைத்து விட்டு வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் மனுதாரர் என்னென்ன கல்விச் சான்றிதழ் வைத்திருந்தார், எங்கே வைத்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . 1ம் மனுதாரரின் கல்விச் சான்றிதழ் எல்லாம் எங்கள் வீட்டில் தான் தற்போதும் உள்ளது என்றால் சரியல்ல . எனது மகன் 1ம் எதிர்மனுதாரர் மேலூர் கோர்ட்டில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சேர்ந்து வாழ வேண்டி வழக்கு தாக்கல் போட்டுள்ளார் . 1ம் மனுதாரர் சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி வழக்கும் தாக்கல் செய்து தீர்ப்பும் சொன்ன பிறகு தான் 2023ம் ஆண்டு எனது மகன் 1ம் எதிர் மனுதாரர் மேலூர் நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல . வழக்கிற்காக மேற்படி வழக்குகள் பற்றி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் திருப்புவனம் வேலம்மாள் பள்ளியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான் . எனது நிரூபண வாக்குமுலத்தில் சொல்லியுள்ள சங்கதியான 30.12.2018ம் தேதி 1ம் மனுதாரர்ரின் தகப்பனார் ஆதிமூலம் உள்ளிட்ட 6 நபர்கள் 1ம் மனுதாரரை எங்களது ஒப்புதலின் பேரில் அழைத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ள சங்கதிகளை நாங்கள் எங்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் உரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட விபரத்தை வழக்கிற்காக நான் பொய்யாக எனது நிருபண வாக்குமுலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் எங்கள் வீட்டை விட்டு விரட்டப்பட்ட பின்னர் அவர் கர்ப்பமாக இருந்த போது அவருக்கு வளைகாப்பு எதுவும் நடத்தினார்களா என்றால் நடத்தவில்லை. எங்கள் வீட்டிற்கு அழைத்து சென்று வளைகாப்பு நடத்த வேண்டும என்று பெரியோர்களை வைத்து பேசினார்கள் என்றாலும் , அதற்கு நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல . 2ம் மனுதாரர் பிறந்த பிறகு நாங்கள் போய் பார்த்தோமா என்றால் எங்களுக்கு சொல்லவில்லை. நாங்கள் பார்க்கவில்லை. 2ம் மனுதாரர் பிறந்த விபரம் எங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 3 மாதம் கழித்து தெரிய வந்தது . அதற்கு பின்னால் எனது மகன் போய் பார்த்து வந்தததாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான் . குழந்தை பிறந்த உடனேயே 1ம் எதிர் மனுதாரர் உட்பட எனது குடும்பத்தினர் அனைவருக்கும் குழந்தை பிறந்த விபரம் தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த விபரம் தெரிந்து கொண்டும் நானும் எனது குடும்பத்தாரும் மனுதாரர்களை போய் பார்க்கவில்லை என்றால் சரியல்ல . 1ம் மனுதாரர் எனது மருமகள் என்ற முறையிலும் 2ம் மனுதாரர் பேத்தி என்ற முறையிலும் அவர்களை பாதுகாக்கவும் பராமரிக்கவும் எங்களுக்கு கடமை உள்ளது என்றால் என் மகன் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வந்தால் நாங்கள் பார்த்து கொள்கிறோம். சேர்ந்து வாழ வைக்க கூடிய மனநிலையில் நானோ எனது குடும்பத்தாரோ இல்லை என்றாலும் வழக்கிற்காக சேர்ந்து வாழ வந்தால் சொத்துரிமை பாத்தியம் உள்ளதாகவும் நாங்கள் பாதுகாக்கவும் பராமரிக்கவும்

தயாராக உள்ளதாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . மனுவின் பரிகாரத்தில் கண்ட சொத்துக்களில் எங்கள் வீட்டு மருமகள் என்ற முறையில் 1ம் மனுதாரருக்கும் பேத்தி என்ற முறையில் 2ம் மனுதாரருக்கும் உரிமை உள்ளது என்றால் என் மகனுடன் சேர்ந்து வாழ வந்தால் உரிமை உள்ளது. 1ம் எதிர் மனுதாரர் எத்தனை பர்னிச்சர் கடை வைத்துள்ளார் என்றால் 1ம் எதிர் மனுதாரர் வைத்திருக்கவில்லை எனது 2ம் மகன் துரைமுருகன் வைத்துள்ளார். கடச்சனேந்தல் , அலங்காநல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள 2 பர்னிச்சர் கடைகளும் 1ம் எதிர் மனுதாரருக்கு மட்டும் பாத்தியமானது என்றால் சரியல்ல. வழக்கிற்காக மேற்கண்ட விபரங்களை பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . மனுவில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரங்களை வழங்குவதற்கு நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் 1ம் மனுதாரர் 1ம் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ வந்தால் நாங்கள் பரிகாரங்கள் வழங்க கடமைப்பட்டுள்ளோம்.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam